சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

OS No. 163/2010

பெயர். திரு.சேகர் நாள் 12.02.2026
த/பெ.மாசிலாமணி

**1 முதல் 3 பிரதிவாதிகள் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு தற்போது 42 வயதாகிறது. 60– 70 வருடங்களுக்கு முன்பு வழக்கு சொத்துகளை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல எண்.477/7 ல் மொத்த விஸ்தீரணம் 57 ஏக்கர் 20 செண்ட் ஆகும். பி.த.சா.ஆ.11 முதல் 13, ருக்மணி, தாஸ், வீராசாமி, மிக்கேல் மற்றும் கோதண்டராமன் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து சொந்தம் என்று எனக்கு தெரியும். ருக்மணிக்கு 41 செண்ட், மிக்கேலுக்கு 2 ஏக்கர் 25 செண்ட், வீராசாமி, தாஸ் மற்றும் கோதண்டராமனுக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது. மிக்கேலின் 2 ஏக்கர் 25 செண்டுக்கு மூன்று திசைகளில் தாஸ் மற்றும் வீராசாமி உள்ளனர். ஒரு திசையில் ருக்மணி உள்ளார். மேற்கண்ட 57 ஏக்கரும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2) மிக்கேலுக்கு எந்த உட்பிரிவு கொடுக்கப்பட்டது என்றால் 477/3. மேற்கொண்டு உட்பிரிவு மைக்கேல் பெயருக்கு இல்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு எத்தனை ஏக்கர் என்றால் 3 ஏக்கர். வாதிகள் சொத்திற்கு

கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே தாஸ், வடக்கே புல எண் 475, தெற்கே புல எண்.478 மற்றும் 480 என்றால் சரிதான். கடலோரத்தில் உள்ள புல எண்.477/3 ஏ 1 முதல் 5 என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் இணைய வழி புல வரைபடம் தான் புல எண்.477 க்கு உரியது என்றால் சரிதான். அந்த புல வரைபடம் வா.த.சா.ஆ.15. மேற்கண்ட 477/3 ஏ 1 முதல் 5 சொத்துகளை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். நான் எந்த உட்பிரிவு எண்ணில் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் தற்போது தான் உட்பிரிவு செய்யப்பட்டது. 2007 அல்லது 2006 ல் உட்பிரிவு செய்யப்பட்டது. பட்டா எங்கள் பெயரில் மாற்றக் கோரி மனு அளித்தோம், ஆனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. புல எண். 477/3 ஏ 1 முதல் 5 ல் உள்ள சொத்துகளை நாங்கள் எப்போதும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல.

3) சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு வழக்கு சொத்தை நில அளவையர் வைத்து அளக்க ஏற்பாடு செய்தேன் என்றால் சரிதான். அதனை நாங்களே அளக்க விடாமல் நிறுத்தி விட்டோம். எங்கள் வழக்கறிஞர் வழக்கு நிலுவையில் அளக்கக் கூடாது என்று கூறியதால் நிறுத்தி விட்டோம். பட்டாதாரருக்கு அறிவிப்பு அளித்த பின்பு தான் அளக்க வேண்டும் என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை, ஆனால் கிராம நிர்வாக அலுவலர் மூலம் தெரியப்படுத்தினோம். எந்த உட்பிரிவு புல

எண்ணிற்கு அளக்க கோரினோம் என்றால் 477/3 ல் எங்கள் அனுபவத்தில் உள்ள சொத்தை அளக்கக் கூறினோம். எவ்வகையிலாவது பட்டாவை எங்கள் பெயரில் மாற்றிவிடலாம் என்பதற்காக நில அளவையர் மூலம் அளக்க ஏற்பாடு செய்தோம் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 ல் கண்ட சொத்துகளுக்கு மூன்று எல்கைகள் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு பகுதியில் தாஸ் நிலம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.1 ல் கிழக்கு பக்கம் வங்காள விரிகுடா கடல் உள்ளதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

4) பி.த.சா.ஆ.1 ற்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.த.சா.ஆ.3 ல் புல எண்.477 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. புல எண்.457 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.த.சா.ஆ.3 படி 457 தான் நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. என்னுடைய ஆவணங்களுக்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் அனுபவத்தை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். பி.த.சா.ஆ.13 அடங்கல் கணக்கு ஆகும். பி.த.சா.ஆ.13 ல் புல எண் 477/1 ல் தான் ருக்மணி அம்மாள், தாஸ் மற்றும் சிலருக்கு சொந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.13 ல் புல எண்.477/3 உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.12 ம் புல எண் 477/1 ற்கு

மேற்கண்ட ருக்மணி மற்றும் மேற்கண்ட நால்வர் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.12 மற்றும் 13ல் புல எண் 477/3 புவனேஸ்வரி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

5) பி.த.சா.ஆ.8 வாய்தா ரசீது எந்த பட்டா எண்ணிற்கு செலுத்தப்பட்டது என்றால் அதில் குறிப்பிடவில்லை மற்றும் எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.8 வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள சவுக்கு மரங்களை நாங்கள் தான் வெட்டி அனுபவம் செய்ததாக தவறாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகள் தான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் மு.வ.151/2007 என்னும் வழக்கை 1ம் பிரதிவாதி மற்றும் சகாதேவன் மீது தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இதே வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தினார் என்றால் சரிதான். அவ்வழக்கில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என்றும், அதில் அவர்கள் அனுபவத்தை தடை செய்யக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியிடமும், என் வழக்கறிஞரிடமும் கேட்கவில்லை.

6) வழக்கு சொத்திற்கான பட்டா வாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வாதி தான் வரி செலுத்தி வருகிறார் என்றால் இல்லை. நாங்களும் கூட்டு பட்டாவில் வரி செலுத்தியுள்ளோம். நாங்கள் தாக்கல் செய்த ரசீதை தவிர வேறு ரசீதுகள் இல்லை என்று சொன்னால் சரிதான். அடங்கலில் வாதிகள் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான். வாதிகளிடம் தொகை பறிக்க வீண் தகராறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**